செ.வெ.எண் :946/2017 நாள் : 09.12.17

**ஒகி புயலால் பாதிக்கப்பட்ட நீரோடி, மார்த்தாண்டான்துறை, வள்ளவிளை, சின்னதுறை, புத்தன்துறை, தூத்தூர் மற்றும் இறையுமன்துறை ஆகிய மீனவ கிராமங்களுக்கு மாவட்ட கண்காணிப்பு அலுவலரும் தகவல் தொழில் நுட்பத்துறை முதன்மை செயலாளர் திரு. டி. கே. இராமசந்திரன் இ.ஆ.ப, கூடுதல் கண்காணிப்பு அலுவலர் முனைவர் திரு. இராஜேந்திரகுமார் இ.ஆ.ப., ஆகியோர் இன்று (09.12.2017) நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாம் மற்றும் தூய்மைப் பணி மேற்கொள்வதை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டனர்.**

கன்னியாகுமரி மாவட்டத்தில், ஒகி புயலால் பாதிக்கப்பட்ட நீரோடி, மார்த்தாண்டான்துறை, வல்லவிளை, சின்னதுறை, புத்தன்துறை, தூத்தூர் மற்றும் இறையுமன்துறை ஆகிய மீனவ கிராமங்களுக்கு மாவட்ட கண்காணிப்பு அலுவலரும் தகவல் தொழில் நுட்பத்துறை முதன்மை செயலாளர் திரு. டி.கே.இராமசந்திரன் இ.ஆ.ப, கூடுதல் கண்காணிப்பு அலுவலர் முனைவர் திரு. இராஜேந்திரகுமார் இ.ஆ.ப., ஆகியோர் இன்று (09.12.2017) நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாம் மற்றும் தூய்மைப் பணி மேற்கொள்வதை நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டனர்.

முன்னதாக, நீரோடி மீனவ கிராமத்தில், மீனவ மக்களுக்காக நடைபெற்றுக் கொண்டிருந்த மருத்துவ முகாமினை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும் கூடுதல் கண்காணிப்பு அலுவலர் ஆகியோர் பார்வையிட்டு போதிய மருந்து இருப்புகள் குறித்தும், மீனவ மக்களுக்கான மருத்துவ உபகரணங்கள் குறித்தும் சம்மந்தப்பட்ட, மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களிடம் கேட்டறிந்தனர்.

பின்னர், மார்த்தாண்டான்துறை, வல்லவிளை, சின்னதுறை, புத்தன்துறை, தூத்தூர் ஆகிய கிராமங்களில் நடைபெற்ற சிறப்பு மருத்துவ முகாமினை பார்வையிட்டனர். மேலும், இந்த மீனவ கிராமங்களில் உள்ள பகுதிகளில் பேரூராட்சி மற்றும் ஊரக வளர்ச்சி துறையின் சார்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் சுற்றுப்புறத் தூய்மைப்படுத்தும் பணிகளையும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் மற்றும், கூடுதல் கண்காணிப்பு அலுவலர் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

பின்னர், மீனவ மக்களை சந்தித்து ஆறுதல் கூறினர். இதுவரை கரை திரும்பாத மீனவர்களை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. எனவே, மீனவ மக்கள் நம்பிக்கையோடு இருக்க வேண்டும் என்றும், கரை திரும்பாத கடைசி மீனவரை மீட்கும் வரை தேடுதல் பணி தொடர்ந்து முழுவீச்சுடன் நடைபெறும் என்றும், இங்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும் இந்த சிறப்பு மருத்துவ முகாம் மீனவர் மக்களின் நலன் கருதி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மீனவ மக்கள் இந்த மருத்துவ முகாமினையும், மீனவ கிராம மக்களுக்காக இங்கு இயக்கப்படும் நடமாடும் மருத்துவ வாகனத்தையும் பயன்படுத்திக்கொள்ளுமாறும் மீனவ மக்களிடம் கூறினர்.

இந்த ஆய்வுகளின் போது வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத்துறை அரசு முதன்மைச்செயலர் திரு.ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., கூடுதல் கண்காணிப்பு அலுவலர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி இ.ஆ.ப, மாவட்ட ஆட்சித்லைவர் திரு.சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.

முன்னதாக, தூத்தூர் மீனவ கிராமத்திற்கு மாவட்ட கண்காணிப்பு அலுவலர், மாவட்ட கூடுதல் கண்காணிப்பு அலுவலர், வேளாண்மைத்துறை செயலர் ஆகியோர் சென்ற போது, மீன்பிடி தொழிலுக்குச்சென்று ஒகி புயலால் பாதிக்கப்பட்டு கரைதிரும்பாத மீனவர்களை முழுவீச்சோடு தேடுதல் பணி மேற்கொண்டதற்காக, மீனவப்பெருமக்கள் மாவட்ட நிர்வாகத்திற்கும் தமிழ்நாடு அரசிற்கும் நன்றி தெரிவித்தனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்**